**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08042024-7826

Volume: 8

Issue: 4

Month: April

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.0.1.2024

Accepted: 26.03.2024

Published: 01.04.2024

Citation:
Paulraj, T. (2024). Feminist Thoughts in the Works of Manikodi P. S. Ramaiah. *Shanlax International Journal of Tamil Research*, 8(4), 153–160.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i4.7826

*Corresponding Author:
palrajd1990@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Feminist Thoughts in the Works of Manikodi P. S. Ramaiah

**T. Paulraj**
*Ph.D. Scholar, Government Arts College for Men*
*Krishnagiri, Tamil Nadu, India*
*https://orcid.org/0009-0003-2484-1154*

**Abstract**

*Manikodi magazine was one of the magazines that appeared during the liberation period. This magazine was founded by Indian freedom fighters like K.Srinivasan, V.Ramasamy and T.S.Chockalingam. K. Srinivasan was the Editor-in-Chief and wrote messages related to liberation and liberation sentiments. This magazine was published as a short story, poem and voice of the freedom struggle which was later transformed into a short story magazine. Newspapers play a major role in the media that supports social change. Manikodi, the national weekly in Tamil literature, sprouted like a morning star in the line of newspapers. It was the first magazine in Tamil to create taste and respect for Tamil literature and it published short stories with cultural values that brought about a change in society. When the editor-in-chief K. Srinivasan got an opportunity to work in Delhi India, he was about to abandon the magazine and P.S. Ramaiah took over the management of the magazine. After P.S. Ramaiah took over, more short stories were featured in Manikodi. Most of the writers of Manikodi short stories have intense patriotism and social consciousness with freedom as their breath. The emancipation of women was also advocated as a wing of the Indian national liberation movement. Manikodi writers who had Bharathiyar as their forerunner wrote short stories on the status of women and reforms for them. V.R., Pudhumaipithan, Chitty, C.S.Chellappa, P.S.Ramaiah, Ku.P.Ra. they also wrote feminist ideas in their works and expressed them to this society through Manikodi.*

***Keywords: Manikodi, C.S.Chellappa, Feminist Thoughts, Pudhumaipithan, Women's Liberation***

**References**

1. P.S. Ramaiah, Manikodi Kaalam, P.10.
2. Dr. K. Panchangam, Tamil Sirukathaigalum Manitha Peruvelium (Review Essays), Therik in Tamil Short Stories; Kum Feminist Perspective, P. 137.
3. V. Anaimuthu, Periyar E.V.R. Sinthanaigal, P.195.
4. P.S. Ramaiah, Malarum Manamum, P.12.
5. Bharathidasan, Puthiya Athichudi, P.34.
6. Bharathiar, Athichudi, P.43.

# மணிக்கொடி பி.எஸ்.ராமையாவின் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்

**து. பால்ராஜ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி

***ஆய்வுச்சுருக்கம்***

*விடுதலை காலக்கட்டத்தில் தோன்றிய இதழ்களில் ஒன்று மணிக்கொடி இதழும் ஒன்று. இவ்விதழ் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களான கு.சீனிவாசன், வ.இராமசாமி, டி.எஸ்.சொக்கலிங்கம் போன்றோர்களால் தோற்றுவிக்கப்பட்டது. கு.சீனிவாசன் இதன் தலைமை ஆசிரியராக இருந்து விடுதலை சார்ந்த செய்திகளையும், விடுதலை உணர்வுகளையும் எழுதி வந்தனர். சிறுகதை, கவிதை, விடுதலைப் போராட்ட குரல் என வெளிவந்த இவ்விதழ், பிற்காலத்தில் சிறுகதை இதழாக உருமாற்றம் பெற்றன. சமூக மாற்றத்திற்குத் துணை நிற்கும் ஊடகங்களில் பத்திரிகைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. பத்திரிகைகளின் வரிசையில் தமிழிலக்கியவானில் தேசிய வார இதழான மணிக்கொடி விடிவெள்ளியாக முளைத்தெழுந்தன. தமிழில் "தமிழுக்கு இலக்கியத்தில் ருசியும் மதிப்பும் உண்டாக்குவதற்கு ஏற்பட்ட முதல் பத்திரிகை அது"[1] இவ்விதழ் சமூகத்தில் மாறுதல்களை விளைவிக்கின்ற பண்பாட்டு மதிப்புகளைக் கொண்ட சிறுகதைகளை வெளியிட்டு இலக்கிய வேள்வி செய்தது. இதன் முதன்மை ஆசிரியர் கு.சீனிவாசன் டெல்லி இந்தியா பத்திரிகையில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததும், இவ்விதழை கைவிடும் தருவாயில், இதனை பி.எஸ். ராமையா பொறுப்பேற்று நடத்தி வந்தார். பி.எஸ்.ராமையா பொறுப்பேற்றதும் அதிகமான சிறுகதைகள் மணிக்கொடியில் இடம்பெற்றன. மணிக்கொடி சிறுகதை ஆசிரியர்களில் பெரும்பான்மையினர் நாட்டு விடுதலையைத் தம் உயிர் மூச்சாகக் கொண்ட தீவிர தேசிய பற்றும், சமூக உணர்வும் கொண்டவர்கள். இந்திய தேசிய விடுதலை இயக்கத்தின் ஒரு பிரிவாகப் பெண் விடுதலையும் வற்புறுத்தப்பட்டது. பாரதியாரைத் தங்களுக்கு முன்னோடியாகக் கொண்ட மணிக்கொடி எழுத்தாளர்கள் பெண்களின் நிலை குறித்தும், அவர்களுக்கான சீர்த்திருத்தங்கள் கொண்ட சிறுகதைகளையும் மணிக்கொடியில் படைத்தனர். வ.ரா., புதுமைப்பித்தன், சிட்டி, சி.சு.செல்லப்பா, பி.எஸ்.ராமையா, கு.ப.ரா. போன்றோரும் பெண்ணியம் சார்ந்த கருத்தாங்களை தன் படைப்புகளில் எழுதி அதனை மணிக்கொடி மூலம் இந்த சமூகத்திற்கு வெளிக்காட்டினர்.*

***முக்கியச்சொற்கள்:*** *மணிக்கொடி, சி.சு.செல்லப்பா, பெண்ணியச் சிந்தனைகள், புதுமைப்பித்தன், பெண் விடுதலை*

## பெண்ணியப் பார்வை

இன்று வரை உலகத்தை அறிதல் என்கிற செயல்பாடு ஆண்களின் பார்வையில் ஆண்களுக்கான மொழியில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. மனிதவாழ்வு என்னும் இயக்கத்தில் சரிபாதியாகப் பங்கெடுக்கும் பெண்ணின் பார்வையும் அவர்களுக்கான மொழியாடலும் இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றன அல்லது உறைந்து போகுமாறு செய்யப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை இன்றைய பெண்ணியச் சிந்தனையாளர்கள் வெளிக்கொண்டு வந்திருக்கின்றனர்.

சமுதாயத்தில் நிலவி வந்த குழந்தைத் திருமணம், விதவையர் நிலை, விதவை மறுமணம் போன்றவற்றை மணிக்கொடி எழுத்தரான பி.எஸ்.ராமையா தன்னுடைய

படைப்புகளில் எடுத்துக்காட்டியுள்ளார். விடுதலைப் போராட்டக் களத்தில் தன்னை இணைத்து கொண்ட ராமையா, விடுதலை உணர்வோடு, பெண்ணிய விடுதலை உணர்வையும் தன் படைப்புகளில் வெளிக்காட்டியுள்ளார்.

## இளம் வயது திருமணம்

உடலும் உள்ளமும் வளராத சிறுவர் சிறுமியராயிருக்கின்ற குழந்தைப் பருவத்தில் நடத்தப்படும் திருமணம் குழந்தைத் திருமணம் ஆகும்.

"பெண்ணிற்குப் பத்து வயதிற்குள் திருமணம்செய்துவைப்பவருக்கு 1972-இல் கொண்டு வரப்பட்ட சிவில் திருமணச் சட்டத்தின்படி ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது"[3]

அதன் பின்னர் 1930 -ல் ஏற்பட்ட சாரதா சட்டமும் குழந்தைத் திருமணத்தைத் தடை செய்கிறது. சட்டத்தை மீறியவர்களுக்குத் தண்டனை வழக்கப்பட்ட போதிலும் அவ்வழக்கம் சமுதாயத்தில் தொடர்ந்து இடம்பெற்றதைச் சிறுகதைகள் சித்திரிக்கின்றன.

இளம் வயதிலே திருமணம் செய்யப்பட்டு, குறுகிய காலத்திலே கணவனை இழந்து விதவையான இளம் வயதுப் பெண்கள் பல இந்நாட்டில் வாழ்ந்து வந்துள்ளனர். அதிலும் கொடுமை, குழந்தைகளோடு தனிமையில் வாழ்ந்து வந்தது.

விடுதலைக்கு முந்தியக் காலக்கட்டத்தில் பருவமடைவதற்கு முன்பே பெண்களுக்கு திருமணம்முடித்துவிடுவர். இதற்கு முக்கியக் காரணம் ஆண்களுக்கு மட்டுமே இருந்த கல்வி உரிமை, வேலைவாய்ப்பு உரிமை போன்ற ஆண்களின் அடக்கு முறைகளே. பெண்களுக்கு குழந்தை பெறும்தன்மைப் பருவமடைந்தப் பின்னே கரு வளர்ச்சி பெறும். ஆனால், இந்திய நாட்டில் ஏழு வயதிலே பெண்களுக்கு திருமணம் செய்து கொடுக்கும் வழக்கம் இருந்து வந்தது.

மாதவய்யா பொறுப்பேற்று நடத்திய "தமிழர் நேசன்" என்னும் இதழில்,

"சம்சார வாழ்க்கையைப் பற்றிப் பேசுமிடத்து ஒரு வயது நிறையாத பெண் சிசுக்களுள் 31 விதவைகளும், ஒன்றுக்கு மேல் இரண்டு வயதுக்குள் 34 விதவைகளும், இரண்டுக்கு மேல் மூன்று வயதுக்குள் 85 விதவைகளும், மூன்றுக்கு மேல் நான்கு வயதுக்குள் 149 விதவைகளும், நாலுக்கு மேல் ஐந்து வயதுக்குள் 385 விதவைகளும் மொத்தம் 15 வயதுக்குள் 23,068 விதவைகளும் 1917 - ஆம் ஆண்டு ஜனசங்கியைப்படி நம்முள் இருக்கின்றனர்"[4] என்று ஒரு புள்ளி விவரத்தைப் பட்டியலிட்டுச் செல்கின்றனர்.

கல்யாணம், கணவன், புகுந்த வீடு என எதுவும் அறியாது விளையாட்டுப் பிள்ளைகளாய் ஓடி விளையாடும் ஏழு வயது பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பதனால் என்ன சுகம் காணமுடியும். ஆனால், ஆண்கள் மட்டும் 15 வயது நிரம்பிய பின்னரே திருமணம் செய்து கொள்வர்.

இதுபோன்ற அவலநிலையைப் பி.எஸ். ராமையா தன்னுடைய படைப்புகளிலும் எடுத்துக்காட்டுகிறார்.

மலரும் மணமும் என்னும் கதையில் வரும் செல்லம் தன்னுடைய தந்தையும், தாயையும் இழந்து அநாதையான பின், தன் தாய் மாமனான லட்சுமணய்யரின் பாது காப்பில் வளருகிறாள். அவள் பெற்றோர் இறந்தபோது அவளுடைய வயது ஏழு.

தன் மாமாவின் மகன் ராமதாசு செல்லமுடன் அன்பாகவும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து விளையாடி பழகுவர். எதுக் கொடுத்தாலும் செல்லம் முதலில் ராமதாசுக்கு தான் என்று தியாக செயலில் விட்டுக்கொடுப்பாள். அவனுடைய வயது 12. இந்த பிள்ளைகளின் அன்பைக் கண்ட இவர்களின் பாட்டி சானுபாட்டி இவர்கள் இருவரும் வாழ்க்கையிலும் ஒன்று சேர்ந்து வாழ்ந்தால் நன்றாக இருக்கும் என்று ஆசைப்பட்டாள். ஆனால், செல்லத்தின்

மாமா செல்லத்தை வெளியில் கட்டிக் கொடுக்கவே ஏற்பாடு செய்தார்.

“அப்போது செல்லத்திற்கு வயது ஒன்பதாகிக் கொண்டிருந்தது. அவர்களிருந்த கிராமத்திற்கு நாலைந்து மைல் தூரத்திலிருந்த வேறொரு கிராமத்தில் புரோகிதம் செய்து கொண்டிருந்த ஒருவருக்கு அவளை இரண்டாந்தாரமாக கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.”[5] (11)

செல்லத்தின் கலியாணம் கூடிய வரையில் சிறப்பாகவே நடந்தது. “கலியாணம் முடிந்து நான்கு வருஷங்களாகியது. அதற்கு பின் அவள் ருதுவான (வயதடைந்தது) செய்தியும், அதன் பிறகு ஒரு வாரத்திற்கு பின் அவள் விதவையான செய்தியும் தெரிந்தது. இவையெல்லாம் என்னவென்றே அறியாத வயதாகவே அவள் இருந்தாள். பாட்டி பிணாகானம் போட்டு அழுததினால், அவளும் அழுதாள்.”[6] (ப.12)

செல்லத்திற்கு தன் கணவன் இறந்து விட்டான், தான் விதவையாகிவிட்டோம் என்பது பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாது. ஆனால், இனி தான் வேறொரு வீட்டிருக்கு போகவேண்டியதில்லை என்பது மட்டும் அறிந்து கொண்டாள். குழந்தையான செல்லத்திற்குத் திருமணம் என்று என்னவென்றே அறியாத வயதில் திருமணம் முடிக்கப்பட்டு, இளம் வயதிலே விதவையான கொடுமையையும் பெண்களுக்கெதிரான சமூகக் கொடுமையாகும். இதுபோன்ற கொடுமைகள் சமூகத்தில் தவிர்க்கமுடியாத ஒன்றாக இருப்பதை ஆசிரியர் இக்கதையின் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

எனது மாஜி கணவர் என்னும் மற்றொருக் கதையில், “சாரதா சட்டத்தின்படி பெண்களின் திருமண வயது 14 என அரசாங்கத்தால் சட்டம் இயற்றப்பட்டாலும், அதை அவர்கள் பொருட்படுத்தாமல் செல்வி சாரதாவிற்கு பதினொன்று முடிந்து பனிரண்டவது வயது ஆரம்பம் ஆகும் போதே மணம் பார்க்கப்பட்டுக் கல்யாணம் செய்யப்படுகிறது.”[7] (ப.22)

கல்யாணம் முடித்து சென்ற கணவன் திரும்பவே இல்லை. தனக்குத் தேவையான சோப்பு, பவுடர், இன்னும் சில பொருட்களை மட்டும் அனுப்பி வைப்பார். சாந்தி கல்யாணமும் நடக்கவில்லை. மூன்று மாதங்கள் கழித்துத் தன் அப்பாவுக்கு கடிதம் ஒன்று வருகிறது. அதில் அவர் கணவர் அசௌக்கியமாகப் படுத்திருப்பாதக எழுதியிருந்தது.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் உடல் வலியால் அவதிப்பட்டார். மருத்தவர்கள் பரிசோதனைச் செய்து பார்த்ததில் அவர் “பால் மாற்றம் அடைந்து, பெண்மைக் குறிப்புகள் தோன்றியிருப்பதாக” (ப.25) தெரிவித்தனர்.

கணவர் திருமணம் முடித்தபின் பால் மாற்றத்தால் பெண்மைத் தன்மை அடைந்து பெண்ணாக மாறியபின், இளம் வயதில் எவ்வித இன்பமும் அனுபவிக்காமல் செல்வி சாரதா தனிமையில் தள்ளப்பட்டால்.

நினைவு முகம் மறக்கவில்லை என்னும் கதையில், ஜனகத்திற்குப் பதிமூன்று வயதிலேயே திருமணம் முடித்து வைக்கப்படுகிறது. திருமணத்தின்போது அவர் முகத்தைக் கூட சரிவர அவள் பார்த்ததில்லை. ஒருமாதம் கழித்துதான் முழுமையாக அவர் முகத்தை ஜனகம் கண்டாள்.

மூன்று மாதம் கழித்துத் தீபாவளிக்கு ஊருக்கு வந்தவர் “திரும்பிப் போய் வருகிறேன்” என்று கண்களால் சொல்லிவிட்டுப் போனவர் திரும்பி வரவேயில்லை.

“அவள் பருவமடைந்தபோது அவர் இந்த உலகத்திலே இல்லை”[8] (ப.195, நினைவு முகம் மறக்கவில்லை)

பெண்களைப் பருவமடைவதற்கு முன்பே, இளம் வயதில் திருமணம் செய்து வைக்கப்படுவதால், அவர்கள் இச்சமூகத்தில் பல பிரச்சினைகளைச் சந்திக்க நேருகிறது. சரியான வயதும், உடல் ஒத்துழைப்பும் இல்லாமையால் குழந்தையின்மையும்

உண்டாகி அவர்கள் இந்தச் சமூகத்தால் இழிவுப்படுத்தும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இளம் வயது திருமணத்தால், சிறு வயதிலேயே கணவனை இழந்து இளம் விதவையர்களாக எந்த இன்பங்களையும் அனுபவிக்க முடியாமல் அனைவராலும் ஒதுக்கப்பட்டுத் தனிமைப்படுத்தும் நிலைக்கே தள்ளப்படுகிறார்கள்.

கைம்மை நிலைப் போன்றே குழந்தைத் திருமணமும் பெண்களுக்கெதிரான கொடுமை ஆகும். குழந்தைத் திருமணம் என்பது பெண்கள் பூப்படையாமலே மணம் செய்து கொடுப்பதாகும். இதனால், பெண்கள் உடல் அளவிலும், உள்ளத்தின் அளவிலும் பல பிரச்சனைகளைச் சந்திக்கின்றனர். பாவேந்தர் பாரதிதாசன்"கைம்மை" என்னும் குழந்தைத் திருமணம் பற்றித் தன்னுடைய "புதிய ஆத் திசூடி"யில் எடுத்துக்காட்டியுள்ளார்.

**"பூப்பின் மணங்கொள்"[9] (பா.எ.62)**

கைம்மை நிலைப் போன்றே "குழந்தைத் திருமணம்" என்னும் நிலையும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த காரணத்தினாலே பாவேந்தர் திருமணம் செய்துக்கொள்ள உரிய பருவமும், வயதும் வந்தபிறகு மணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார். திருமணம் என்றால் என்ன? என்பதுகூடத் தெரியாத இளம் வயதிலேயே பெண் குழந்தைகள் திருமணம் என்னும் கூட்டுக்குள் அடைக்கப்பட்டு, அவர்கள் படும் துன்பங்களையும், இன்னல்களையும் கண்டு மனம் பொறுக்க முடியவில்லை என்று பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துக் காட்டியுள்ளார். (புதிய ஆத்திசூடி, பாரதிதாசன்)

### விதவையர் மறுமணம்

உலக இன்பத்தை நுகர்ந்து அலுத்துப் போயிருக்கும் பழுத்த கிழவனாயினும், தன் மனைவி இறந்துவிட்டவுடன் மறுமணம் புரிய முயலுகிறான். அதுவும் வனப்பு மிகுந்த, எழில் பொருந்திய பெண்களை மனத்திற்குத் தேர்ந்தெடுக்கிறான். பெண்மகள் தன் கொழுநனை இழந்துவிட்டால் அவள் உலக இன்பத்தையே சுவைத்தறியாதளாயிருப்பினும் தன் ஆயுட் காலம் முற்றும் அந்தோ, தன் இயற்கைக் கட்புலனை இறுக மூடி, மனம் நொந்து, வருந்தி மடிய நிபந்தனை ஏற்பட்டு விடுகிறது.

இதுபோழ்து நம் நாட்டில் விதவைகள் மறுமணம் செய்துகொள்ளலாகாதென்னும் வழக்கமிருப்பது பாரபட்சம் நிரம்பிய கொடுமையான செயலாகும். தன் மனைவியை இழந்த கிழவன் மறுமணம் செய்துகொள்ளலாமென்றும், தன் கணவனை இழந்த - மகப்பேறு பெறாத இளமங்கை மறுமணம் செய்து கொள்ளலாகாதென்றும் கூறுவது நடுநிலைமை கொண்ட அறச் செயலாகாது.

விதவைகள் மறுமணம் செய்து கொள்ளும் வழக்கம் கற்புக்குப் பங்கம் விளைவிப்பது ஆகும் எனக் கூறினால் அது பொருந்தாது. விதவைகள் மறுமணம் செய்விக்காதிருத்தலினாலேயே அவர்கள் கற்பழிந்து மாய்கின்றனர். காமச்சுவை கருதும் இளம் கைம்பெண்கள் பதிற்றொழுக்கத்தில் வீழ்ந்து, அதனால் கருப்பந்தரித்து இரண்டோர் திங்களும் 'சிசு ஹத்தி' தோஷத்திற்கு உள்ளாகின்றார்கள். இப்பாவம் யாரைச் சாரும். விதவைகள் மறுமணம் செய்துகொள்ளல் ஆகாதென்று கட்டாயப்படுத்திவரும் பெற்றோர்களையே சாரும். மறுமணம் விரும்பாத பெண்களைத் தவிர்த்து, ஏனைய கைம்பெண்களுக்கு மறுமணம் செய்வித்தலே நன்று என்று பெரியார் எடுத்துரைக்கிறார்.

விதவைகளின் கொடுமையை நீக்க நூறு வருடங்களாக இராஜாராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்தியாசாகரர், கோலாம்பூர் மகாராஜா, சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய அறிஞர்கள் பாடுபட்டு உழைத்தனர். இதுபோழ்தும் இத்தகைய சீர்த்திருத்தத் துறையில் பாஞ்சாலத் தலைவர்கள் பலர்

இறங்கி உழைத்து வருகின்றனர்.[10] (குடியரசுக் கட்டுரை, 22.8.1926)

இந்தியாவிலும், இந்து மதத்திலும்கூட அநேக சாதிகளில் விதவை மணம் அனுமதிக்கப்பட்டும் நடந்தும் வருகின்றது என்று 19.4.1935 -இல் காரைக்குடியில் நடைப்பெற்ற சொற்பொழிவில் விதவைகளின் மறுமணம் பற்றிப் பெரியார் பேசியுள்ளார்.

“விதவைத் திருமணம்” என்கிற சொல், நமது பெண்கள் விஷயத்தில்தான் சொல்லப்படுகிறதேதவிர, ஆண்கள் விஷயத்தில் சொல்லப்படுவதில்லை. எப்படி இந்த அம்மை ஒரு புருஷடனுடன் கூடி, அவர் காலமான பிறகு இன்னொரு புருஷனை மணந்து கொள்கிறார்களோ - அதுபோல ஆண்களும் பலர், ஒரு மனைவி தவிர இரண்டாவதாக வரிப்பதை “விதவைத் திருமணம்” என்கிறார்களா? “விதவன் திருமணம்” என்று தானே போட வேண்டும்?

கணவனை இழந்த பெண்கள் அடைந்த துன்பங்களை எல்லாம் கண்டு உள்ளம் வருந்திய படைப்பாளர்கள் மக்களுக்கு அந்நிலையை உணர்த்தியதால், மறுமணம் செய்துவைக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது.

கணவனை இழந்தவர்கள் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று (1856) சட்டம் அனுமதி வழங்கியதால் விதவைப் பெண்களுக்கு மறுமண அனுமதி கிடைத்தது. விதவை மறுமண அனுமதி கிடைத்த முக்கால் நூற்றாண்டுக் காலத்திற்குப் பிறகும், மணிக்கொடிக் காலத்தில் அரிதாக, சென்னை போன்ற நகரங்களில் மட்டுமே ஆரியசமாஜங்களின் ஆதரவினால் ஒரு சில மறுமணங்கள் நடைபெற்றன.[11]

மரபு மீறுவது சமூகக் குற்றம் என்று மறுக்கும் மூத்த தலைமுறையின் முடிவான கருத்தை அடுத்தத் தலைமுறையைச் சேர்ந்த சகோதரன் உடைத்து ஒரு புதிய திருப்பம் உண்டாக்குகிறான்.

வாழ்வில் இல்லற இன்பத்தைச் சிறிதும் அடையாமல் அவலநிலைக்கு உட்பட்டு மறுமணம் செய்து வைக்கப்பட்டாலும் அந்த மறுமணத்தை உடனே ஏற்றுக்கொள்ள இயலாமல் தவிக்கின்ற பெண்ணின் மாறுபட்ட மனநிலை வெளிப்படுகிறது.

விதவை, கணவன் நினைவுகளுடன் வாழ்ந்தால் நல்ல பெயர் பெறுவாள், அதை மீறும் பெண்களுக்குச் சமுதாயத்தில் மதிப்பிருக்காது என்று மரபைப் போற்றுபவர்கள் கூறி வந்திருப்பதால், அவை அந்த பெண்ணின் மனத்தில் ஊறிக் கிடக்கிறது. அதனால், தனக்குத் துணை தேவை என்று மறுமணம் செய்துகொண்ட பிறகு, அவ்வாறு செய்தது தவறோ என்று எண்ணுகிறாள்.

விதவை பெண்கள் மீது காதல் கொண்ட இளைஞர்களும் மறுமணம் செய்து கொள்ளும் விழிப்புணர்வு பெற்றனர்.

கணவனை இழந்த இளம் பெண்கள் மறுமணம் செய்துகொள்ள வேண்டும் பாவேந்தர் பாரதிதாசனும் தன்னுடைய “புதிய ஆத்திச் சூடி”யில் வலியுறுத்தியுள்ளார்.

**“வாழாட்கு வாழ்வு சேர்”[12]**

**(பாடல் எண். 79)**

“வாழாள்” என்னும் ஏதோ காரணித் தினால் கணவனை இழந்து வாழாமல் இருக்கும் பெண் எனப் பொருள்படும். அத்தகைய பெண்களை ஆண்கள் எவ்வித தயக்கமின்றி மறுமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஓர் உயரிய கருத்து இங்கே பாவேந்தரால் பெண்களுக்கு ஆதரவாக வலியுறுத்தப்பட்டு உள்ளது. (பாரதி, புதிய ஆத்திசூடி)

மறுமணச் சிந்தனை விடுதலைக் காலக் கட்டத்திற்கு முன்பு இருந்தே இலக்கியங்களின் வழி வலியுறுத்தப்பட்டு வந்தது. பாரதியார், பாரதிதாசன், கவிமணி, பெரியார், அண்ணா, புதுமைப்பித்தன் போன்றோர் தாம் படைத்த இலக்கியத்தின் வழி பெண்ணிய விடுதலைப் பற்றியும்,

பெண்ணிய மறுமணம் பற்றியும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளனர். விடுதலைப் போராட்ட காலக்கட்டத்தில் வெளிவந்த மணிக்கொடி இதழிலும் பெண்ணியச் சிந்தனைகள் பரவலாக எழுதப்பட்டன. மணிக்கொடி எழுத்தாளரான பி.எஸ். ராமையாவும் தம் சிறுகதைகளில் பெண்ணியம் சார்ந்த பெண் விடுதலை, பெண் மறுமணச் சிந்தனையையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

'மலரும் மணமும்' என்னும் சிறுகதையில், செல்லத்திற்கு ஏழு வயது இருக்கும்போதே திருமணம் செய்து வைக்கப்படுகிறது. திருமணம் பற்றியே அறியாத வயது. "அவள் ருதுவான (வயதடைந்த) போது அவள் கணவன் இறந்து, அவள் விதவையாகிறாள். பெண் என்ற அமைப்பில் அழகில் மேம்பட்டிருந்த ஒருபெண் விதவை அலக்கோலத்தில் தள்ளுவது ஏன் என்று, தன் தாய்மாமன் மகன் ராமதாஸ் அவளை மறுமணம் செய்துகொள்ள முடிவு எடுக்கிறான். விதவா விவாகா சங்கத்தின் மூலம் அவளை திருமணம் செய்துகொள்ள முடிவுச் செய்து, இந்த சமூகக் கட்டமைப்புகளை எல்லாம் மீறி 'விதவையான செல்லத்தை' மறுமணம் செய்துகொள்கிறான்"[13].

மற்றொரு கதையான 'எனது மாஜிக் கணவர்' என்னும் கதையில், சாராதவிற்கு மாப்பிள்ளை வீட்டாரின் வேண்டுதலுக்கிணங்க தேவையான வரதட்சணைக் கொடுத்து திருமணம் செய்துவைக்கப்படுகிறது. திருமணத்திற்கு பிறகு, மாப்பிள்ளை பி.ஏ. இறுதி பரீட்சை எழுதியிருப்பதால் அதன் முடிவு வரும்வரை சாந்தி முகூர்த்தம் தள்ளி வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

மூன்று மாதம் கழித்து சாரதாவின் தந்தைக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் மாப்பிள்ளை அசௌக்கியமாகப் படுத் திருப்பதாகவும், அவரை உடடினடியாக வரும்படியும் எழுதியிருந்தனர். அவருக்கு உடம்பெல்லாம் வலி அதிகமாக இருக்கிறது என்று மருத்துவர்கள் சில மருந்துகளை தந்தனர். பின் வலி குறைய குறைய உடலில் சில மாற்றங்கள் நிகழ்ந்தது. அதாவது, அவர் ஆண் தன்மையிலிருந்து பெண் தன்மையாக பால் மாறியுள்ளார். இவை அனைவருக்கும் ஆச்சிரியமாக இருந்தது. கணவன் இருந்தும் விதவையான செல்வி சாரதாவிற்கு மறுமணம் செய்து வைக்க அவள் பாட்டியும் தந்தையும் யோசனை செய்தனர்.

இந்து சமயத்தில் ஒருதரம் மணம் செய்தவர்கள், மறுபடியும் மறுமணம் செய்ய முடியாது என்ற சில கட்டுப்பாடுகள் வகுத்துள்ளனர். இதனைக் கட்டுடைக்கும் விதமாக செல்வி சாரதாவிற்கு மறுமணம் செய்து வைக்க சிந்தனை முன்வைக்கப்பட்டது.

'நினைவு முகம்' மறக்கவில்லை எனும் மற்றொரு கதையில், ஜனகத்திற்குப் பதிமூன்று வயதில் திருமணம் செய்துவைக்கப்படுகிறது. திருமணம் ஆன சிறிது நாளிலே, தீபாவளிக்கு வீட்டிற்கு வந்து சென்ற கணவன் இறந்த செய்தியே வந்து சேர்ந்தது.

அதற்கு பின் ஜனகம் தன் சகோதரர் மகாதேவய்யர் வீட்டில் இருந்தால். மகாதேவய்யர் ஒரே நிறுவனத்தில் பணி புரியும் சேதுராமனும் இவரும் நல்ல நண்பர். இலக்கிய வாசிப்பில் அதிகம் ஆர்வம் உடையவர். வாசித்த இலக்கியத்தைப் பற்றி இருவரும் உரையாடிக் கொள்வது உண்டு.

விடுமுறை நாட்களில் இருவரும் கலந்துரையாடுவது உண்டு. அப்போது, ஒருநாள் சேதுராமன் மகாதே வய்யர் வீட்டிற்குச் சென்றார். அங்கு எதிர்பாராத விதமாக ஜனகத்தைச் சந்திருக்கிறார். இருவரும் பார்வையும் சந்திக்கின்றன. அவை பின்னாளில் காதலாக மலருகிறது.

சேதுராமன் மகாதேவய்யரிடம் ஜனகத்தைத் திருமணம் செய்துகொள்ள விருப்பம் தெரிவிக்கிறான். திருமணத்திற்குப் பிறகு பெண்கள் மறுமணம் செய்துகொள்ள இந்த சமூகத்தில் கூடாது என்று சில கட்டுப் பாடுகளை விதித்துள்ளனர். இதனை

மகாதேவய்யர் அவருடைய வீட்டாருக்குத் தெரிவிக்க, அவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரித்தனர். அதையெல்லாம் பொருட்படுத்தாது மகாதேவய்யர் ஜனகத்திற்கு மறுமணம் செய்ய ஏற்பாடுகள் செய்தார். இந்துத்துவக் கட்டமைப்பையும் மீறி ஜனகத்திற்கும், சேதுராமனுக்கும் திருமணம் செய்யப்பட்டது.[14]

விதவையர்க்கு மறுமணம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தும் பாத்திரமாக சேதுராமன் படைக்கப்பட்டிருக்கிறார். சமூகச் சிந்தனையுள்ள பாத்திரங்களாக சேதுராமனையும், மகாதேவய்யரையும் ஆசிரியர் படைத்துள்ளார்.

**சான்றெண் விளக்கம்**

1. பி.எஸ்.ராமையா, மணிக்கொடி காலம், ப.10
2. முனைவர் க.பஞ்சாங்கம், தமிழ்ச் சிறுகதைகளும் மனிதப் பெருவெளியும் (திறனாய்வுக் கட்டுரைகள்), தமிழ்ச் சிறுகதைகளில் தெரிக்ˆகும் பெண்ணியப் பார்வை, ப.137
3. வே. ஆணைமுத்து, பெரியார் ஈ.வெ. ரா. சிந்தனைகள், ப.195
4. முனைவர் க.பஞ்சாங்கம், தமிழ்ச் சிறுகதைகளும் மனிதப் பெருவெளியும் (திறனாய்வுக் கட்டுரைகள்), தமிழ்ச் சிறுகதைகளில் தெரிக்ˆகும் பெண்ணியப் பார்வை, ப.137
5. பி.எஸ். ராமையா, மலரும் மணமும், ப.12
6. மேலது, ப.13
7. மேலது, எனது மாஜி கணவர், ப.23
8. மேலது, நினைவு முகம் மறக்கவில்லை, ப.176
9. பாரதிதாசன், புதிய ஆத்திசூடி, ப.34
10. பெரியார், குடியரசு இதழ், நாள் : 22.08.1926
11. தி. செந்தமிழ்செல்வி, மணிக்கொடி சிறுகதைகளில் மகளிர், ப.76
12. பாரதியார், ஆத்திசூடி, ப.43
13. பி.எஸ்.ராமையா, மலரும் மணமும், ப.14
14. மேலது, நினைவு முகம் மறக்கவில்லை, ப.178
15. வே.ஆனைமுத்து, பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், ப.201
16. மேலது, ப.204
17. பி.எஸ்.ராமையா, மலரும் மணமும், ப.11
18. மேலது, வளையல் துண்டு, ப.71